## சுருக்கம்

கல்வி வரி - நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் -கல்வி வரிமூலம் (Education Cess) ஈட்டும் நிதியினை அந்த உள்ளாட்சிப் பகுதிக்குள் அமைந்திருக்கும் பள்ளிகளின் மேம்பாட்டிற்காக செலவழிக்க ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி4) துறை

அரசாணை (நிலை) எண்.65 நாள்: 2.3.99

**ஆணை:**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் கல்வி வரியாக (Education Cess) வசூலிக்கப்படும் தொகை முழுமையாக பள்ளிகளின் முன்னேற்றத்திற்காக செலவிடப்படுவதில்லை என்றும் உள்ளாட்சியின் ஆளுகையிலுள்ள பல பள்ளிகளில் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையை மாற்ற மேற்படி வரித்தொகை முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து இதை அரசு கவனமாக பரிசீலித்தது.

2. நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் தாங்கள் வசூலிக்கும் கல்வி வரியை முழுமையாக அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் ஆளுமையிலுள்ள தொடக்கப் பள்ளிகளுக்கும், உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளுக்கும் பள்ளிகளின் மேம்பாட்டிற்கு மட்டுமே செலவிடுமாறும், அவ்வாறு செலவழிப்பதில் கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிகளை கடைபிடிக்குமாறும், அறிவுறுத்தப்படுகிறது.

(அ) நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் கல்வி வரியாக வசூலிக்கப்படும் தொகையில், ஒவ்வொரு பள்ளிக்கும் குறைந்தது ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) கட்டிட மேம்பாட்டிற்காக செலவிடப்படவேண்டும். இந்த தொகை ஒவ்வொரு ஆண்டும் 20% வீதம் உயர்த்தப்பட வேண்டும்.

(ஆ) கல்வி வரியாக வசூலிக்கப்படும் மொத்தத் தொகையில், குறைந்தபட்சம் 25% தொகையாவது பள்ளிக் கட்டிடங்களின் பராமரிப்பிற்காக செலவிடப்பட வேண்டும்.

(இ) நகர்புற உள்ளாட்சி அமைப்புகளால் ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்படவிருக்கும் பராமரிப்பு பணிகள் பற்றிய விபரங்கள் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அதிகாரிக்கு தெரிவிக்கப்படவேண்டும்.

(ஈ) அதே போல் சம்பந்தப்பட்ட முதன்மை கல்வி அதிகாரி தேவையெனக் கருதும் பள்ளிக் கட்டிட பராமரிப்பு பணி பற்றிய விபரங்களை சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தெரிவிக்க வேண்டும்; உள்ளாட்சி நிறுவனங்கள் செயல்படுத்தும் பணிகளில் இவற்றையும் சேர்த்துக் கொள்ள கருதப்பட வேண்டும்.

(உ) மேலே 'அ' மற்றும் 'ஆ' -ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகை பராமரிப்பு பணிகளுக்கு மட்டும் பொருந்தும். இவை தவிர தேவையான பிற மூலதனப் பணிகளும் (கூடுதல் வகுப்பறைகள், புதிய கட்டிடங்கள், கழிவறைகள் போன்றவை) மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த பணிகளுக்காகும் செலவினத்திற்கு எந்தவித உச்சவரம்பும் இல்லை.

(ஊ) கல்வி வரியாக வசூலிக்கப்படும் தொகையை பொதுக்கணக்கிற்கு மாற்றம் செய்யக்கூடாது. உள்ளாட்சி அமைப்புகள் மேற்கண்ட செலவினங்களை கல்வி வரியிலிருந்து மேற்கொள்ள இதற்கென தனியாக ஒரு கணக்கை பராமரிக்க வேண்டும். இவ்வாறு பராமரிக்கப்படும் கணக்கானது உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநரின் தனிப்பட்ட தணிக்கைக்கு உட்பட்டதாகும். குறிப்பிட்ட ஒவ்வொரு இனத்திற்கும் குறைந்தபட்ச அளவு தொகையானது செலவழிக்கப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையில் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.

(எ) நகராட்சி நிர்வாக ஆணையர் மேற்சொன்ன செயல்பாடுகள் குறித்து கண்காணித்து செயலாளர், பள்ளிக்கல்வித்துறை மற்றும் பள்ளிக்கல்வி இயக்குநருக்கு தனது ஆண்டு அறிக்கையை அனுப்பவேண்டும்.

3. மேலே பத்தி 2ல் உள்ள ஆணையை செயல்படுத்தும் பொருட்டு தக்க அறிவுரைகளை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.

பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை 108.

ஆணையாளர்கள், அனைத்து மாநகராட்சி

முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.

முதலமைச்சரின் சிறப்புப் பணி அலுவலர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-9.

செயலாளர், நிதித்துறை, சென்னை-9.

இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-108.

இயக்குநர்,பள்ளிக்கல்வித்துறை, சென்னை.

நகல் :

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(பொது)துறை,சென்னை 9.

செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

உதிரி நகல்/ இருப்புக் கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அ. அண்ணாமலை 2/3/99

பிரிவு அலுவலர்.